2004 பிப்ரவரி 10]

வட்டாட்சியர் அலுவலகங்களைப் பொறுத்தவரையில், மாநிலத்தில் மொத்தம் உள்ள 206 வட்டாட்சியர் அலுவலகங்களில், 182 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 11-வது நிதிக் குழுவின் மானியத்திலிருந்து கீழ்க்கண்ட 6 வட்டாட்சியர் அலுவலகங்கள், வரும் மூன்று ஆண்டுகளில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் தேனி மற்றும் போடிநாயக்கனூரிலும், கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரத்திலும், பெரம்பலூர் மாவட்டத்தில் வேப்பந்தட்டையிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் பூந்தமல்லி மற்றும் பள்ளிப்பட்டிலும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், வானூர், திருக்கோயிலூர், திண்டிவனம் ஆகிய வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் 11-வது நிதிக் குழுவின் மானியத்திலிருந்து கட்ட உத்தேசிக்கப்பட்டு உள்ளது. மீதம் உள்ள 18 வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்டும் பணி வருங்காலத்தில் படிப்படியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் கட்டடம் கட்டிய பின்னரே பழுதடைந்துள்ள பழைய அரசு கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடம் கட்டுவது குறித்து அரசு பரிசீலிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.

28—

தடுப்புச் சுவர் அமைத்தல்

***35197—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டம், குன்னூர்-ஊட்டி நெடுஞ்சாலையில் பாய்ஸ் கம்பெனி எதிரே தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2004 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குன்னூர்-உதகை நெடுஞ்சாலையில் பாய்ஸ் கம்பெனி பேருந்து நிறுத்தத்திற்கு எதிரே சதீஸ் ஸ்டோர்ஸ் அருகில் மண் திட்டு உள்ளது. இவ்விடத்தில் மழைக் காலங்களில் மண் சரிவு ஏற்பட்டுள்ளதாலும், மேலும் இனிவரும் காலங்களிலும் மண் சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாலும், அந்த இடத்தில் ரூ.1.50 இலட்சம் செலவில் மண் வளப் பாதுகாப்புத் துறை மூலமாக 2003-2004-ல் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் தடுப்புச் சுவர் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குன்னூர்-ஊட்டி நெடுஞ்சாலையில், பாய்ஸ் கம்பெனி எதிரில் அமைச்சர் குறிப்பிட்ட இடத்தில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்பட்டு போக்குவரத்து தடைப்படுகிறது. இதனை உடனடியாக சரி செய்வதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்க விரும்புவதோடு, நீலகிரி மாவட்டத்தில் அடிக்கடி நிலச்சரிவு ஏற்பட்டு, உயிர்ச்சேதங்கள்கூட ஏற்படுகிறது. இந்த நிலச்சரிவை நிரந்தரமாகத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் ஒரு காலத்தில் தடுப்புச் சுவர் துறை என்று அழைக்கப்பட்டு வந்தது. சுமார் 90 சதவிகித நிதி இந்தத் தடுப்புச் சுவருக்காகவே, தனியாக ஒதுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது இந்த மாதிரி ஒதுக்கப்படுவது இல்லை. சில கிராமங்கள்—அட்டுபாய் போன்ற கிராமங்கள் எல்லாம், அரசு, குந்தா மின் நிலையத்திற்காக அந்தக் கிராமத்தை காலி செய்து புதிதாகக் கட்டும்பொழுது, ஒவ்வொரு வீட்டிற்கும் அருகிலே நிலச்சரிவு ஏற்படும் நிலை; பள்ளிக்கூடங்கள், அரசு நூலகங்கள், கல்வி நிலையங்களுக்கு

எல்லாம் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அதற்காக நிதி ஒதுக்குவது இல்லை. ஆகவே, அரசே இதையெல்லாம் கருத்தில்கொண்டு வரும் ஆண்டில் 25 சதவிகிதம் தடுப்புச் சுவருக்காக ஒதுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சிரமம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எந்த அளவுக்கு பரிசீலிக்கப்பட முடியுமோ அந்த அளவுக்குப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ.வ. வேலு.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால் மாநில அரசுக்கு இந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டு நிதிக்கு, எவ்வளவு ரூபாய் ஆண்டுக்காண்டு ஒதுக்கப்படுகிறது? அப்படி ஒதுக்கப்படுகின்ற பணம் தமிழ்நாட்டிலே இருக்கின்ற மலைவாழ் மக்கள் பகுதிகளுக்கு சரிசமமாகப் பகிர்ந்து கொடுக்கப்படுகிறதா? அப்படி பகிர்ந்து கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், என்னுடைய தொகுதியிலே தீபிரப்பட்டி, ஆத்திப்பாடி மற்றும் புத்தூர்செகரி என்கின்ற ஊராட்சிகள் எல்லாம் மலைவாழ் மக்கள் பகுதிகள்தான் இதுவரையில் இந்த மூன்றாண்டுக் காலத்தில் எந்த நிதியும் வரவில்லையே, அது ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மைய அரசு ஒதுக்குகின்ற நிதி. நடப்பு ஆண்டிற்கு 22 கோடியே 10 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ், கோவை, ஈரோடு, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி பகுதிகளில் உள்ள மலைவாழ் மக்களினுடைய நலன் பேணப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 29, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.